மலேசியாவின் பினாங்கு மாநிலத்தில், The Rise – எழுமின் அமைப்பின் சார்பில் நடைபெற்ற 15வது உலக மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மலேசியாவின் பினாங்கு மாநில முதலமைச்சர் சௌகான் இயோவ் (Chow Kon Yeow), பினாங்கு மாநில ஆட்சிக் குழு உறுப்பினரும் வீடமைப்பு மற்றும் கூழல் துறை அமைச்சருமான டத்தோ சுந்தராஜு, The Rise – எழுமின் அமைப்பின் நிறுவனர் தமிழ்ப்பணி ம.ஜெகத் கஸ்பர், மலேசியா எழுமின் அமைப்பின் தலைவர் சின்னப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர். தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பங்கேற்றுள்ளனர்.

முரசொலி மாறன் 92வது பிறந்தநாள் :

முதல்வர் - தலைவர் தருமபுரியில் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை!

முரசொலி வளாகத்தில் உள்ள சிலைக்கு - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மரியாதை!

சென்னை, ஆக. 19 -

முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாகச் செயல்பட்டவரும் - ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளினை முன்னிட்டு, முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள், நேற்று முன்தினம் (ஆகஸ்ட் 17) தருமபுரியில் முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் துறைமுகம் காஜா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., முரசொலி பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன் உள்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, ஆக. 19 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (19.8.2025- செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம்

தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்

1.'ஒரணியில் தமிழ் நாடு'

2.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட, மாநகர கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன் தலைமையில் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ. தங்கராஜ் முன்னிலையில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் கழக பிரச்சாரக்குழு மகளிர் அணி செயலாளர் உமா மகேஸ்வரி, பகுதி கழகச் செயலாளர்கள் கொ.இராமதாஸ், வெ.ஜோதி, போலார் சம்பத்குமார், மாநகர துணை செயலாளர்கள் அ.ராமசாமி, தேவி முருகேசன், பொருளாளர் அ.சரவணகுமார், பொதுக்குழு உறுப்பினர் சண்முகசுந்தரம் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் மத்திய ஒன்றியம் தென்குமரை ஊராட்சியில் முதலமைச்சரின் 'தாயுமானவர் திட்டத்தின்' மூலம் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இல்லம் தேடி ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யும் திட்டத்தை மத்திய ஒன்றிய தி.மு.க, செயலாளர் சாத்தப்பாடி க.பழனிசாமி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வெண்ணிலா மணிகண்டன், கிளைச் செயலாளர் சந்திரசேகர், ராமலிங்கம், பெரியசாமி, மற்றும் கூட்டுறவு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 92 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் அவரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் அமைச்சர் எஸ்.ரகுபதி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா, கழக இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கே.ஆர்.என்.போஸ், க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, சுப.சரவணன்,சு.சண்முகம், கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், என்.சாத்தையா, வே.ராஜேஸ், அ.ரெத்தினம், எம்.எம்.பாலு, சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராதா, மு. கலைஞர் கருணாநிதி, வடவாளம் க.செ.மணிமாறன், ப.ரெங்கராஜன், கி. சுப்பிரமணியன், ஆ.மரிய எட்வின், ராயல் சபா, ஆதீஸ்வரன், ஆத்மநாபன், கண்மணி சுப்பு, ஏ.கே.அண்ணாதுரை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை முன்னிட்டு

மாபெரும் கருத்தரங்கம் - ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் – கவிச்சுடர் கவிதைப்பித்தன் – மருதூர் ஏ.ராமலிங்கம் சிறப்புரை! ஆ.கிருஷ்ணசாமி தலைமை!

புதுக்கோட்டை, ஆக.19–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாபெ ரும் கருத்தரங்கம் மற்றும் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் புதுக் கோட்டை, மாலையீடு கற்பக விநாயகர் மஹா லில் 16.08.2025 சனிக்கி ழமை அன்று காலை 10.00 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம். எல்.ஏ., தலைமையிலும், ஆதி திராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் ஏ.இரா மலிங்கம், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் வி.பி. இராஜன், செ.புஷ்பராஜ், மாநில துணைச் செய லாளர்கள் பி.துரைசாமி, அரூர் சா.இராஜேந்திரன், கொடநாடு மு. பொன் தோஸ், மு.பரமானந்தம், கொ.ரமேஷ் ஆகி யோர் முன்னிலையிலும் நடை பெற்றது.

இக்கருத்தரங்கு கூட்டத்தை இயற்கை வளங்கள் துறை அமைச்ச ரும் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் மற்றும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டி யன் ஆகியோர் கருத்தரங்கை துவக்கி வைத்து சிறப்புரையாற்றி னார்கள்.

இக்கூட்டத்தில் புதுக் கோட்டை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சவேயர் மா.நடேசன் வரவேற்புரையாற்றி னார். நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா, மாநில இலக்கிய அணி துணைத் தலைவர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிதைப் பித்தன், மாநில மருத்துவர் இணைச் செயலாளர் டாக்டர் ரகு அண்ணா மலை, சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், மாநில மாற்றுத்திறனாளிகள் அணி தலைவர் ரெ.தங்கம், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாநகர பொறுப்பாளர்கள் துணை மேயர் எம்.லியாகத் அலி, வே. ராஜேஸ், மாவட்டத் துணைச் செயலாளர்

ஸ்ரீதேவி அண்ணாத்துரை, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், மு.க.ராம கிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், எஸ்.எம். சீனியார், கே.பி.கே.டி.தங்கமணி, ஆறு.சிதம்பரம், கே.எஸ்.ரவி, அரு. வடிவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, ஆர்.செல்லத்துரை, ஆர்.வி. செல்வம், கீரமங்கலம் பேரூர் செயலாளர் கே.சி.சிவக்குமார், அணிகளின் அமைப்பாளர்கள் பாத்திமா பீவி, வி.ஜி.ஆர். மணிவண்ணன், சி.அரங்கநாயகம், எம்.எம்.பாலு, புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட ஆதிதிராவிட நலக் குழு நிர்வாகிகள் வே.கோவிந்தன், எம்.ஆர்.அன்பழகன், டி. அப்புக்காளை, வி.கோவிந்தராஜன், வே.ஆதீஸ்வரன், பி.கே. வெங்கடேஷ், டி.முருகேசன், த. கண்ணன், சி.சிவா, எம்.சி.மணி, எஸ்.சோமையா, சுப.சின்னையா, எஸ்.அன்பழகன், வே.சுரேஷ் கண்ணன், வீ பெத்தையா, சி. செல்வகுமார், ஆறு. பால கிருஷ்ணன், எஸ்.மாரிமுத்து,

மாவட்ட, மாநகர தலை வர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், பகுதிகழகஅமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனை வரும் கலந்து கொண்டனர். முடிவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் எம்.சுப்பையா நன்றி கூறினார்.

புதுக்கோட்டை மாவட்ட திராவி முன்னேற்ற கழக ஆதிதிராவிடர் நலக்குழு சார்பாக 16.08.2025 சனிக்கிழமை அன்று கற்பக விநாயகர் மஹால் மாலையீடு, புதுக்கோட்டையில் மாபெரும் கருத்தரங்கமும், புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நடைபெற்றது. மேலும் கூட்டத்தின் வாயிலாக புதுக்கோட்டை ஒருங்கிணைந்த ஆதிதிராவிடர் நலக்குழு சார்பாக 7 தீர்மானங்கள் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தீர்மானம் 1: ஆதிதிராவிடர் மக்களின் தென்னாற்காடு தலைவர் இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு சிதம்பரத்தில் நினைவு மண்டபம் சிலை திறப்பு விழாவும் நடத்தி பெருமைப்படுத்திய திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு புதுக்கோட்டை ஆதிதிராவிடர் நலக்குழு சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை நலக்குழு தெரிவித்துக் கொள்கிறோம்.

தீர்மானம் 2 : திராவிட மால் அரசின் தொடர் சாதனையாக ஆறு திட்டங்கள் தூய்மை பணியாளர்களுக்கு நலன் காக்கும் திட்டம் முதலமைச்சர் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் புதிய 6 திட்டங்கள்.

1. தூய்மை பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு காலை உணவு வழங்குதல்.

2. தூய்மை பணியாளர்களின் உடல் நலன் காக்க தற்போது உள்ள அரசின் 5 லட்சம் மருத்தவ காப்பீடுகள். மிகைத்தொகையாக மேலும் ரூ.5 லட்சத்திற்கான புதிய திட்டம்.

3. தூய்மை பணியாளர் நல வாரியம், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை மூலம் 30,000/ வீடு குடியிறுப்புகள்.

4. தூய்மை பணியாளர் நலவாரிய உறுப்பினரின் குடும்பத்தினர் சுய தொழில் தொடங்க 3 லட்சம் வரை மானியம் 6% வட்டி மானியம்.

5. தூய்மை பணியாளர் வீட்டு மாணவர்களின் கல்வி நலன் கருதி 7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் உதவித்தொகை வழங்கப்படும்.

6. தூய்மை பணியாளர்கள் பணியின் போது இறந்தால் நலவாரிய நிதியுடன் மேலும் ரூ.5 லட்சம் சேர்த்து ரூ.10 லட்சம் நிவாரண நிதியாக வழங்கப்படும் என்று இந்த ஆறு திட்டங்கள் செயல்படுத்திய முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

3. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வருக்கெல்லாம் முதல்வராக இருந்து சுதந்திர தினத்தன்று ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் முதல்வர்கள் கொடியேற்றும் உரிமையை பெற்று தந்தார். அவரின் கொள்கை வாரிசாக தந்தை பெரியார் வழியிலம், அறிஞர் அண்ணா வழிகாட்டுதலால் இவர்கள் மூவரின் நீட்சியாக நீதி கட்சியின் வாரிசாக உச்சநீதிமன்றத்தில் சட்ட போராட்டம் நடத்தி, ஆளுநருக்கு என்று தனி அதிகாரம் இல்லை. அமைச்சர்களின் ஆலோசனைப்படி தான் செயல்பட வேண்டும் என்று 9 மசோதாக்கள் நிறைவேற்றி மாநில உரிமையை நிலைநாட்டி ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் வழிகாட்டியாக செயல்படும் நம் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தொண்டர்களாக நாம் செயல்பட்டு பெருமை கொள்வோம்.

4. புதிய கல்வி கொள்கை என்ற பெயரில் பிற மொழி திணிப்பு 3, 5 ,8 ஆம் வகுப்புகளில் பொது தேர்வு வைத்து நமது பிள்ளைகளின் கல்வியை சிதைக்க நினைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து நம் பிள்ளைகளின் கல்வி காவலர் திராவிடம் மாடல் முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

5. மாநில அரசின் வளர்ச்சி திட்டங்களுக்கு நிதி கொடுக்காமல் ஜிஎஸ்டி கல்வி நிதி 2500 கோடி நிலுவை, மகாத்மா காந்தி 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத் தொகை ரூ.4500 கோடி, விளையாட்டு துறைக்கு இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே மிகவும் குறைவாக நிதி ஒதுக்கிய ஒன்றிய ஓரவஞ்சனை மோடி அரசினை திமுக ஆதித்திராவிடர் நல குழு சார்பாகவன்மையாககண்டிக்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் துலுக்கனூர் ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை கள்ளக்குறிச்சி எம்.பி. தே.மலையரசன் தொடங்கி வைத்தார். இம்முகாமில் ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் டாக்டர். வே.செழியன், ரா.வரதராஜ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சேகர், அய்யா கண்ணு ,சின்னசாமி, வேலன், ராஜேந்திரன், துரைசாமி, பழனிசாமி, மோகன்ராஜ், கருணாகரன், சிவசக்தி, ரஞ்சித், ராமன், பூக்கடை ராஜா, சேட்டு, கருணாநிதி, ரஜினி மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி, கோவை மாநகராட்சி, வார்டு எண் 100 கணேசபுரம் பகுதியில் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி அரசு நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் 4 வகுப்பறைகள் கட்டும் பணியினை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் வெற்றிசெல்வன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், குறிச்சி வடக்கு பகுதி பொறுப்பாளர் கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் குறிச்சி பிரபாகர் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.